**Rates**

*Subscriptions :*
Inland Rs. 15-00 per year
Foreign Rs. 20-00 " "
Single copy 40 cts. (including postage)

*Advertisement :*
On application

*In Memoriam :*
Rs. 12-50 per insertion (within 4 inches)

*Order Nisi :*
Rs. 15-00 for two insertions (within 6 inches)



# The MORNING STAR

உதய தாரகை

Registered as a Newspaper — (Established 1841) — Published Every Friday

Vol. 128. JAFFNA, FRIDAY, JANUARY 19TH, 1968. No 3.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



**Notice**

*Please Address :*

(1) All Editorial matter (excluding news) for the English pages) to : The Editor, The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to : The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy.

(4) All Business correspondence *re* Advertisements and Subscriptions and all remittances to :

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.


## FROM THE MANAGER'S DESK

Our advertisement rates have been revised as follows, and will take effect from January 1st, 1968. All advertisements within 2 ins. Rs. 10 - 00. In Memoriam Rs. 12-50.

Other rates on application.

## Calendar of Events

January 18 — 25 :
Week of Prayer for Unity.

January 21 :
Unity Sunday.

February 7 — 10 :
'Camp Farthest Out' by Roland Brown and Marcia Brown at the Christa Seva Ashram.

## 30, 584 POUNDS OF NESPRAY FOR JAFFNA

This time, Jaffna will get 30,584 lbs. of Nespray, and this will be distributed to those who have Infant coupons, through the Multi Purpose Co-operative Societies. One child will receive one pound of Nespray according to this scheme.

## SIXTY DOCTORS UNEMPLOYED

The Health Ministry is awaiting a ruling from the Prime Minister, in regard to the employment of sixty Doctors who completed their internship this year and who were informed that they could not be absorbed into the Health Ministry. A further 160 Medical students are expected to complete their final examination in June this year and will have to be provided with internship.

## NEW DOCTOR FOR MANIPAY HOSPITAL

Dr. S. C. Jeyarajah, who was in Government service for several years and last at the Government Hospital, Jaffna, has now joined the staff of the Green Memorial Hospital, Manipay. He is a specialist in Ear, Nose and Throat diseases and holds the following degrees : M. B. B. S., D. T. M. and H. of Ceylon, and D. L. O. of London. He is a son of Mr. J. C. Charles, retired Vice-Principal of Jaffna Central College, and Mrs. Charles of Nallur.

## KALMUNAI TO HAVE URBAN COUNCIL STATUS

The Minister of Local Government has appointed a Commission to inquire into and report whether the Kalmunai Town Council should be upgraded to the status of an Urban Council.

## GUIDES CAMP AT CHUNDIKULI

The Guides of Jaffna are camping at Chundikuli Girls' College this week-end. We understand that this Camp is a prelude to the International Guide Camp to be held in February, in Colombo.

## INSURANCE POLICY HOLDERS' ASSOCIATION

An Association named the Insurance Policy Holders' Services Ltd., has been formed to promote, protect and advance the interests of the Insurance Policy Holders. Its main work would be to carry on in all its respective branches the business of Consultants in matters relating to Insurance. The main advantages the members of the Association would have are free legal advice, free claim advice, free advice in the selection of the type of policy according to one's requirements, and negotiation on their behalf with their Insurer for previleges and benefits.

## WEDDING

*Breckenridge — Mac Intyre*

A quiet but pretty wedding was solemnized at St. Paul's Church, Milagiriya, on January 6th at 6-30 p.m. when Mr. Mano Breckenridge (son of the late Mr. B. B. Breckenridge of Trinity College, Kandy and of Mrs. Breckenridge) led to the altar Miss Evelyn Mac Intyre (daughter of the late Mr. E. T. Mac Intyre, Finger-print Expert of Colombo and of Mrs. Mac Intyre and grand-daughter of the late Dr. E. T. Mac Intyre of Kuala Lumpur). The nuptial knot was tied by the Rev. C. W. Munukiena, who also preached the homily.

The attesting witnesses were Mr. B. G. S. David, Chief Police Magistrate, Colombo and Mr. S. T. B. Harasgama, Manager of Collette's Ltd., where the bridegroom is employed.

## "PASANILA" IN ENGLAND

"Pasanila", the first 16 m. m. Tamil film produced in Ceylon, has been taken by the Anglo-Ceylon Club to be shown in England, from March to May this year. This film produced and directed by Messrs. Joe Devanandhan and Devu Kulathungam and technically directed by Mr. Luther Selvarajah is the first Tamil film of Ceylon to be shown abroad. Incidentally Mr. Joe Devanandhan has been the technical director of the Mental Health film "At Home in Hospital" produced in 1967 by Dr. David Ratnavel. This film was shown at the Australian and New Zealand College of Psychiatrists' Congress in Perth and was highly appreciated. The W. H. O. is now interested in obtaining this film for their Library.

## BIBLE SOCIETY ANNUAL MEETING

The 155th Annual Meeting of the Ceylon Bible Society was held on the 11th December, 1967, at the Central Y. M. C. A. Hall, Colombo. The Patron of the Society and the Bishop of Colombo, the Rt. Rev. Harold de Soysa, presided. The opening prayers were led by the Rev Andrew Baillie, of Scots Kirk, Colombo. The Lessons were read in English, Sinhala and Tamil by Misses Ruba Samuel, Myrna Abeyasekara and Master Godfrey Thomas, who are pupils of the Presbyterian Girls' School, Regent Street, St. Paul's Girls' School, Milagiriya, and St. Thomas College, Mount Lavinia, respectively. The delegates from Ceylon to the United Bible Societies Asian and South Pacific Regional Conference held recently in Thailand — the Rev. S. J. de. S. Weerasinghe, Messrs. B. E. Fernando, A. B. S. N. Pullenayagam and the Rev. Celestine Fernando — reported on the recommendations of the Conference. The "Sunbeams" provided Lyrics in all three languages and musical items and the Rev. Don Rubesh, of the Back to the Bible Broadcast, proposed the Vote of Thanks.

After the meeting, which was well attended, there was a Fellowship Dinner, arranged by the Women's Committee of the Bible Society, in which about 125 persons participated and the happy evening terminated with the singing of carols led by the Rev. Don Rubesh and the "Sunbeams".

## CHRISTIAN UNITY WEEK

This week, from the 18th till the 25th, is being observed as the Christian Unity Week of Prayer. Churches are conducting special prayer meetings in this connection.

## PASTOR CONDEMNS !

Church members should "shape up or get out of the church" says the Rev. Robert K. Hudnut, who believes it is time to refuse membership in the church to those "who are not dead serious about their faith and those who treat their membership cavalierly."

Pastor of St. Luke Presbyterian Church in Minnetonka, Minn., Mr. Hudnut says most churches can afford to lose two-thirds of their members. "Less than one-third are really carrying out their faith," he declared.

Mr. Hudnut said, "The soft sell of a soft gospel has attracted soft people to soft jobs, but it has not turned the world upside down for Jesus Christ. It has not driven weal hy American churchmen into the slums and gutters of the world to pick up those who are segregated and impoverished.

"So now the churches are finding that they are full of perjurers. We have confessed Jesus Christ as our Lord and Saviour, but many of us have never cracked the Bible and have never done anything more for the starving of the world than to give each week a price of a hot dog at a ball park......

*U. C. H.*

## WEDNESDAY AS FUTURE CHURCH GOING DAY !

It may not be too long before churches will be forced to hold services on a day other than Sunday, says Archbishop Howard H. Clark, Canada's Anglican Primate.

"Wednesday evening seems more acceptable," he stated. "That's the only time everybody is in town."

The Primate said that too many people support the church simply to maintain it for Sundays. They do not want the church to be involved in controversial business or political issues.

This great concern for Sunday, he said, was one reason the world in general did not take the church seriously.

## FRESH WATER FROM THE SEA

A £ 1, 250, 000 order has been signed with Weir Westgarth of East Kilbride, Scotland, for three seawater distillers to be built at Marsa Creek, Grand Harbour, Malta.

The Malta Electricity Board contract calls for completion by July 1969, with the first plant scheduled for operation by the end of 1968.

With a total output of 3, 650, 000 imperial gallons of fresh water a day, the plants will be integrated with the nearby electricity generating station to obtain their power supply in the form of steam from the stations's turbines.

The distillers will be of the multi-stage flash evaporator type, originally developed by Weir Westgarth scientists in 1958 and now the basis of all modern, large-scale seawater distillation plants. They will produce fresh water to meet the growth in local industry and the tourist trade on the island.

### Intensive Research

Weir Westgarth has designed and built more than half the world's present capacity of large-scale — more than 100, 000 gallons a day — land-based seawater distillation plants.

The firm has just completed two months ahead of schedule, the building of Australia's first major desalination instalation — two plants with a total capacity of 400, 000 gallons a day for the Hamersley Iron Company in Western Australia.

In recent years the company has been collaborating with the United Kingdom Atomic Energy Authority (UKAEA) under the Ministry of Technology's desalination research programme.

A practial example of this collaboration is the company's newly-commissioned research establishment at Troon, Scotland. Where combined UKAEA and Weir Westgarth research is undertaken to ensure that commercial installations typified by the Malta project embody advanced and proved desalination technology.

## ANIMAL HEART BANK AIM OF U. S. DOCTOR

A project aimed at conditioning the hearts of unborn calves for later transplanting into human patients is reported by Dr. Charles A. Hufnagel, developer of the first artificial heart valve. The experimental programme could eventually lead to an animal heart bank. The doctors could draw on for a critically ill heart patient rather than have to wait for a suitable human donor.

Dr. Hufnagel, who transplanted human heart tissue as early as 1918 and introduced the now commonplace artificial heart valve a few years later, believes the total artificial heart is the ultimate answer because it solves the problem of tissue rejection. However, he says, "medical research is probably closer to a permanent successful transplant than to the total artificial heart". He added : "An artificial heart with an external power source should be available in the next few years, but a heart with a self-contained power source is farther in the future". Meantime, he reported, Georgetown is conducting research involving treating calf embryos still in their mothers' wombs with suppressive drugs and radiation to minimize or eliminate the rejection mechanism : the innate tendency of the organism to throw off transplanted tissue as foreign matter.

In the five human-to-human heart transplants already performed there has been no opportunity to precondition the donated heart before implanting it to the recipient's chest. Post-operative treatment to suppress the patient's rejection tendency has been employed, using radiation and anti-cancer drugs in combination or singly. Such treatment lowers the patient's ability to fight off disease, leaving him vulnerable to germs, bacteria and viruses he would ordinarily throw off. Dr. Hufnagel said his research would concentrate on calves, "and the younger the heart the better from the standpoint of further minimizing the immune response, the rejection problem", he said. Calves are also by nature less "antigenic", that is less vulnerable to having their tissue rejected, he said, than some other animals with hearts large enough for transplanting into humans.

Dr. Hufnagel said a few preconditioning experiments with embryonic calves [illegible] Georgetown [illegible] progressed sufficiently to permit even a [illegible]

*U. S. I. S.*

## FROM FAR AND NEAR

### CELL DISCOVERY OPENS NEW APPROACH TO DISEASE CONQUEST

By Charles R. Schroth

U. S. researchers have found out something new about the living cell that opens an entirely new approach to the conquest of a host of diseases, including cancer.

Two biochemists of Roswell Park Memorial Institute, working on a different problem, discovered the outer walls of cells carry RNA, the chemical "computer tape" that guides the destiny of the cell. More importantly, they found RNA may rub off on adjoining cells, changing them for good or bad.

The finding is contrary to a central tenet of biology that says RNA is present only in the nucleus deep inside the cell. RNA is the "messenger" molecule that translates into action the genetic code as laid down by DNA, the master life molecule.

The American Cancer Society has reported the discovery by Dr. Leonard Weiss, Director of the Institute's Department of Experimental Pathology, and an associate, Dr. Eric Mayhew.

The scientists were investigating the way cells attach themselves to one another when they discovered the new finding. They found when cells were nudged or teared loose from their moorings on glass, they left behind "footprints" An analysis of the footprints showed they contained RNA. They subsequently demonstrated in the test tube that the RNA was biologically active, just as it is in nature.

The scientists showed the RNA is secreted beyond the cell wall to glass surfaces; they did not show RNA is transferred among living cells. However, the evidence is that this does take place, they said.

The scientists worked with cells of mammals, not all the cells had stores of RNA in their membranes.

The Cancer Society, commenting on the significance of the work, said : "One may wonder whether cancer cells might be reformed into normal cells by being forced to take up normal RNA and whether a log of diseases due to imperfect cellular chemistry can be cured or controlled by exposing the sick cells to cells capable of transferring healthy RNA"

The possibility of RNA transfer among cells, the Society said, also raises these basic questions :

— Is this the process by which embryonic cells develop, specialize, and age in organisms?

— Is this the way all cells acquire the ability to recognize one another (by identical RNA) and to detect and manufacture antibodies against impostors like viruses, germs and foreign tissues ?

— Do parasite cells transmit their membrane RNA to normal cells in initiating auto-immune disease such as happens in leukemia?

— Do cancer cells "infect" normal cells with malignant characteristics by rubbing off some of their malignant membrane RNA on them?

Modern biochemistry theory holds the densely packed nucleus containing DNA and RNA controls the behaviour and function of the cell. The nucleus is thought of as a computer that directs and regulates the manufacture of specialized proteins that form the bulk of the cell and make it what it is, be it a muscle cell, a liver cell or what-have-you.

Modern cancer theory, in turn, rests firmly on the DNA-RNA concept. The theory says cancer is a disruption of the heart of the cell in which an invader (virus or some other agent) takes over the normal DNA and starts the process of producing offspring cells with the same distorted machinery, accumulation of these cells forms malignant growth or tumors.

The new work hold out the possibility that RNA "rub off" from the walls of cells may be a factor in the rise of cancer and in the spread of cancer through the body. It also offers hope that someday [illegible] of "normal" RNA may be used as a vaccine to [illegible] or even prevent its onset.

*U. S. I. S.*

## TAMILS' EDUCATIONAL WELFARE SOCIETY

A deputation from the Tamils' Educational Welfare Society headed by Mr. S. J. V. Chelvanayakam, Q. C., M. P., met the Director of Education, Colombo Region Mr. B. P. M. Senanayake recently to protest against an attempt to discontinue the Tamil stream at Presbyterian Girls' School, Dehiwela and to apprise him of the difficulties experienced by Tamil children.

Associated with the Director of Education were the following Officials viz. Mr. V. Weerawardena, Ch. E. O., Mr. V. Sankaralingam, Ch. E. O. and Mr. T. Manickavasagar, C. E. O.

The members of the deputation were : Mr. S Somasundaram, Mr. E Rasiah, Mr. S Nagarajah, Mrs. E S. Wijeyarajah, Mr A. S. Nadarajah and Mr. S. Sivasubramaniam.

The deputation told the Director that the School authorities had been discouraging the growth of the Tamil stream and that was why the strength of the Tamil speaking children there was not impressive. It was illustrative of what was happening at other places.

Representations also were made regarding the Tamil stream at St. Clare's College, Kotalawerapura Tamil mixed School, Wellawatta Maha Vidyalaya, Girls' High School, Mt. Lavinia and other schools having Tamil streams and the need for laboratory facilities for Tamil girls to study Science subjects and Mathematics. The Director agreed to give due consideration to the representations.

The Director of Education explained in detail the steps he had already taken to provide accommodation to nearly 450 Tamil medium children who were not able to get direct admission to schools in the Colombo City. He also mentioned that this was made possible by an admission Board visiting various centres and interviewing parents after due notice and assigning schools for various children. The Director further stated that it was the onus of his department to give every child of school-going age (4 yrs. 11 months on 1.1.68) admission to Grade 1 in a school as far as possible nearest to the residence. He requested the deputation to appreciate the fact that the Tamil medium schools are scattered about unlike the Sinhala medium Schools which are situated at close range. He also stated it was not possible to give every child—Sinhala / Tamil / Muslim a School of the parent's choice.

Mr. Sivasubramaniam on behalf of the deputation expressed its thanks to the Director and stated that this was a transitional period full of difficulties for departmental officials and for the general public and that mutual co-operation was necessary in the interest of the educational welfare and the general unity of the people.

## MORE SHIPS THIS TIME ?

The signs are that more ships will be diverted to Jaffna this season.

Last year only two ships called at Jaffna during this season. This year already the second ship is being unloaded and a third is expected shortly — the 'Kanthos' which will be diverted to Jaffna with 6,000 tons of flour. This information has been conveyed to the Government Agent, Jaffna, by the Food Commissioner.

The Jaffna season lasts till April and the Harbour Services Union expects more ships to be diverted to Jaffna this time.

— *The Co-operator*

## TO ALL OUR SUBSCRIBERS

We regretfully announce to all our subscribers that our subscription rates have been increased to Rs. 15 - 00 per year for subscribers in Ceylon, and to Rs. 20 · 00 per year for those outside Ceylon. The new rates take effect on the 1st January, 1968.

We are forced to take this step for reasons well known to you. For more than ten years the subscription has remained static, while the cost of paper, printing and even postage has doubled or even trebled. We have borne this very heavy burden for too long and an increase in subscription is *only one way out* to meet the heavy expenditure involved.

**Manager.**

## CHRISTIAN TEACHERS' GUILD

The Annual General Meeting will be held on Sunday, January 21, at 3 p. m., at the Trimmer Hall, Jaffna. After the meeting there will be a Special Service at St. Peter's Church, Jaffna.

Preacher : Mr. Glenn Yocum.

*All Christian teachers are welcome !*

For the Secretary,
C. B. Bavinck.

3

## CAMP FARTHEST OUT

Pastor Roland Brown and Marcia Brown will conduct a Camp Farthest Out at the Christa Seva Ashram from 4 00. p. m. on Wednesday Feb. 7th., till noon on Saturday 10th. For further details contact Rev. S. Selvaretnam at the Christa Seva Ashram.

3 & 5

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

*Testamentary Jurisdiction.*

*No. 2022.*

In the matter of the Last Will and Testament of Daniel Kathiravelu Perinpanayagam of Atchuvely North, Atchuvely.

Deceased.

Josephine Nesaratnam Perinpanayagam, widow of Daniel Kathiravelu Perinpanayagam of Atchuvely North, Atchuvely.

Petitioner.

This matter coming on for disposal before N. M. J. Rajendram, Esquire, District Judge, Jaffna, on the 12th day of February 1967 in the presence of Mr. G. V. Balasingham, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated 12th day of February 1967 and the affidavit of the Notary and attesting witnesses dated 12th day of February 1967 and the Last Will and Testament dated 3rd November 1961 and attested by G. V. Balasingham under No. 4021 deposited in this Court having been read.

It is ordered that the above named Last Will No. 4021 dated 3rd November 1961 produced and now deposited in Court be and the same is hereby declared proved and the Petitioner as the Executrix named in the said Last Will be and she is hereby declared entitled to have Probate issued to her accordingly on her payment of Estate Duty and taking Oath of Office.

The 12th day of February, 1967.

Sgd. G. C. Niles,
District Judge, Jaffna.

Drawn by

G. V. Balasingham.
Proctor for Petitioner.

3—4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிதோறும் வெளிவருவது

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128 | 19 — 1 — 1968 இதழ் 8

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம்."

## விசேட திகதிகள்

ஜனுவரி 18—25

கிறிஸ்தவ ஒருமைப் பாட்டுக்கான மன்றாட்டு வாரம்.

ஜனுவரி 21

கிறிஸ்தவ ஒருமைப்பாடு ஓய்வுநாள்.

கோட்டை ஆலயத்தில் மாலை ஆராதனை.

கிறிஸ்தவ ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம்.

## ஆட்கள்

தைலந்தின் தலைநகராகிய பாங்கொக்கில் ஜனவரி 30— பெப்ரவரி 8 வரை நடைபெறவிருக்கும் கிழக்காசிய கிறிஸ்தவ மகாநாட்டின் நாலாவது பொதுக்கூட்டத்துக்கு தெ. இ. சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பிரதிநிதியாக மறைத்திரு ஜே. ஜே. இரத்தினராசா செல்லவிருக்கின்றார். இம்மாசம் 27 ஆம் திகதி செல்லவிருக்கும் அவருடன் அவர் மனைவியும் கூடச் செல்லுகின்றார். அவர்கள் அடுத்தமாதம் 21 ஆம் திகதிவரை திரும்புவார்கள்.

○

றேவலட் பிறவுண் போதகரும் அம்மையாரும் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வருவர். இலங்கையில் 10 நாட்கள் வரை தங்கவிருக்கும் அவர்கள் பெப்ரவரி 7 — 10 ல் மருதனாமடம் ஆச்சிரமத்தில் அமைதிக் கூட்டங்கள் நடத்துவர்.

## மறுமைப் பிரவேசம்

லயனல் தர்மேந்திரன் லோறன்ஸ்

சவாலி, திரு. உவில்லியம் தர்மலிங்கம் லோறன்ஸ் (சுதேச அபிவிருத்திச் சங்கம், ஓமந்தை) திருமதி கண்மணி லோறன்ஸ் ஆகியோரின் இளைய மகனும், மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவனுமாகிய செல்வன் லயனல் தர்மேந்திரன் லோறன்ஸ் இம்மாசம் 15 ஆம் திகதி இரவு பரிதாபகரமான சூழ்நிலையில் தமது 16 ஆம் வயதில் மறுமைக்குள் பிரவேசித்தனர். 17 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு மறைத்திரு எல். என். ஹிச்கொக் அவர்களால் நடத்தப்பட்ட சேயாராதனையில் மறைத்திரு. ஐ. ரீ. இயேசுதாசம் அருளுரை வழங்கினர். மறைத்திரு ஜீ. எம். கனகரத்தினமும் பங்குபற்றினர்.

மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப் பட்டனர். இவரது பிரிவால் துயருறும் பெற்றோர், 2 சகோதரர், 3 சகோதரிகள், உற்றோர் நண்பருக்குத் தேவ தேற்றரவு கிட்டுவதாக.

## சமாதான விண்ணப்பமும் உலக கிறிஸ்தவ சபைகளும்

பாப்பரசர் ஆறுவது சின்னப்பர் உலக சமாதானத் தினமாக ஜனவரிமாதம் முதலாம் திகதியை பிரகடனஞ் செய்து, தமது செய்தியை நல்மனமுடைய சகலருக்கும் விடுத்த சில மணித்தியாலங்களுள் செனிவா நகரிலிருந்து உலக கிறிஸ்தவ சபைத் தலைவர் தத்தம் சபையினரைப் பாப்பரசரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்குமாறு கேட்டுக்கொண்டனர்.

'சமாதானத்தை நீதியுடன் நிலைநாட்டவேண்டிய வழிமுறைகளிலிருந்து நாம் கோழைத்தனமாக நீக்கிவிட முயற்சிப்பதை வெறுக்க வேண்டும்' எனப் பாப்பரசர் கூறியிருப்பது பலரது சிந்தனைகளையும் தட்டி எழுப்பியிருக்கின்றது. பாப்பரசரின் சமாதான தினப் பிரகடனத்தின் பின்புதான் வியட்நாமில் போர் நிறுத்தம் 24 மணித்தியாலத்திலிருந்து 36 மணித்தியாலமாக நீடிக்கப்பட்டது. இந்த நீடிப்பு நிகழ்ச்சி ஒரு சிறு கருமமாய் நமக்குத் தோன்றினும் பாப்பரசர் அதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

## ஒட்லி மண்டபத்தில் நடைபெற்ற ஒளி விழா

சில வருடங்கட்கு முன்னர் நமது வணக்க முறைகளும், சங்கீதம், வாத்தியம் முதலியனவும், மேலைத்தேய செல்வாக்குக்குள் கட்டுண்டவையாக இருந்தன. நம்மவர் கீழைத்தேய பாரம்பரியத்தையும் பண்ணையும் அறவே அசட்டை செய்து விசித்திரமாகப் பாடும் பரிதாப நிலை இருந்து வந்தது. இந்த நிலையிலிருந்து கிறிஸ்தவ வணக்கமும், தமிழ்ப் பண்பும் பாதுகாக்கப்பட பல மெய்யடியார்கள் அயராது உழைத்தனர். ஆங்கிலேய ஆட்சி அகன்ற பிறகும் இப்பண்பு மாறவில்லையே என்று ஏங்கினர். தமிழ்க் கவிஞர்கள் கூட்டுப் பிரார்த்தனைகளையும் தெய்வீகப் பாடல்களையும் இயற்றித் தந்தனர். இதனால் மாற்றம் சிறிது சிறிதாக ஏற்பட்டது. இசைப்பண் ஆராதனைகளும், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளும் கிறிஸ்தவர்களை "விழித்தெழச்" செய்தன.

இத்தகைய மாற்றங்களின் உச்சியோ என்றெண்ணும் வண்ணம் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி நடைபெற்ற ஒளிவிழா அமைந்துவிட்டது. அதன் நிகழ்ச்சிகள் உயர்ந்த கலைப்பண்புடையவைகளாய் விளங்கின. எந்த சமயத்தவரையும் பரவசமூட்டும் வகையில் நடிப்பும், இசையும், நடனமும் அமைந்தன. சில சமயங்களில் ஒரு தமிழ்க் கலை விழா வைப்பார்த்துக் கொண்டிருக்கிறோமோ என்றெண்ணத் தோன்றியது.

முதலாவது காட்சி பக்திக்குரியதாக விளங்கியது. தேவதூதனும், மரியாளும் பயபக்தியுடன் தமது பாகங்களைச் செய்து காட்டினர். யோசேப்பு உறுதியும் திண்மையும் உடையவராகக் காணப்பட்டபோதும் முகத்தில் உணர்ச்சிகளை எடுத்துக் காட்டவில்லை. பேச்சு சர்வசாதாரணமாக இருந்தது.

சத்திரமும் மாட்டுத் தொழுவமும் பல சுவைகளைத் தந்தன. ஆனால் சத்திரக்காரி மரியாளை மாட்டுத்தொழுவத்திற்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. சில மாற்றங்களைச் செய்திருக்கின்றனர் தமிழ்ச் சினிமாவைப் பின்பற்றி! மாட்டுத் தொழுவத்தின் முன் உபதேசம் செய்த வயோதிப இடையன் வெகு சிறப்பாக இருந்தான். அவன் பேச்சில் தெளிவும் கருத்தும் உணர்ச்சியும் காணப்பட்டன. அவ்விடையனுக்கு நடித்தது ஒரு பெண்மணிதான் என்று நாடகம் முடிந்தபின்தான் நமக்குத் தெரிந்தது.

ஆட்டிடையரும் தேவதூதரும் என்ற காட்சி நம்மை இசை வெள்ளத்தில் ஆழ்த்தியது. கிணற்றடியில் பெண்கள் பேசிக்கொண்டதும், சண்டை பிடித்துக்கொண்டதும், தண்ணீர் மொண்டதும் இயற்கையாக இருந்தன. இரண்டு சிறந்த நடனங்களும் இவ்விழாவில் இடம்பெற்றன. 'வானம் புவி பாதாளம்' என்றகீதத்திற்கு அபிநயம் தத்ரூபமாக அமைந்தது. பரதநாட்டியமும் நமது அஞ்சலிக்குள் வந்து விட்டதை அறியும்போது புளகாங்கிதம் அடைகிறோம். கீழைத் தேசத்தில் வளரவேண்டிய நமது சமயம் இந்த வகையிற்றான் மாற வரவேண்டும். நாம் சரியான பாதையிற்றான் போகிறோம் என்பதற்கு இது நல்ல சான்று.

S. 8.

## மின்சார விநியோகம்

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் 175 கிராமங்கட்குப் புதிதாக மின்சார வசதியளிக்கவும் 127 கிராமங்கட்கு மேலதிக மின்சாரம் கொடுக்கவும் திட்டமிட்டுள்ளார்.

## நாவலருக்குச் சிலை

யாழ்ப்பாணத்தில் நாவலருக்குச் சிலை எழுப்ப வேண்டுமெனப் பல பொது ஸ்தாபனங்களும் சங்கங்களும் வற்புறுத்தி வந்ததைத் தொடர்ந்து யாழ். பொதுசன நூல்நிலைய முன்றிலில் அவருக்குச் சிலையெழுப்ப உள்ளூராட்சியமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகிறாரென்றும், சித்திரை வருடப்பிறப்பன்று அது திறந்து வைக்கப்படலாமெனவும் தெரிகிறது.

நூல் நிலைய மண்டபத்துள் சரஸ்வதி சிலையும் நிறுவப்படுமாம்.

## பாலுணவு விநியோகத்தில் புதுமுறை

பங்கீட்டரிசி விநியோகிக்குக் கடைகளிலிருந்து ஒவ்வொரு வீடும் பாலுணவு பெற வழி செய்யப்படவிருக்கிறது. குழந்தைகள் விசேட கவனம் பெறுவர். ஏனையோர் வரிசைக் கிரமத்தில் பெறுவர்.

பாலுணவு இறக்குமதியாளரின் பகிர்ந்துசெய்வோர் தொடர்ந்து விநியோகஞ் செய்வோராயிருந்தாலும் எல்லா இடங்களுக்கும் தேவையான அளவு அவ்வுணவுகள் செல்ல வகை செய்யப்படும்.

## வாலிபருக்குத் தொழிற் பயிற்சி

நாடெங்கும் தொழிற் பயிற்சி நிலையங்கள் நிறுவ தொழிலமைச்சு திட்டமிட்டுள்ளது. படித்த வாலிபர் இந்நிலையங்களில் பயிற்சி பெறுவர். ஆரம்பமாக யாழ்ப்பாணம், காலி, கண்டியில் இந்நிலையங்கள் நிறுவப்படும். பண நிலைக்குத்தக ஏனைய இடங்களில் பின் நிறுவப்படும். மோட்டார் இயந்திரவேலை, மின்சார வேலைகளில் பயிற்சியளிக்கப்படும். வருடந்தோறும் ஒவ்வொரு நிலையத்திலும் 500 பேர் பயிற்சிபெற வசதிகள் செய்யப்படுமெனத் தெரிகிறது.

## புதுவகை உருளைக் கிழங்கு

அதிக மாச்சத்து உள்ளதும், விரைவில் முற்றிவிடக் கூடியதுமான ஒருவகை உருளைக்கிழங்கைச் சைபீரிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தப் புதுவகை உருளைக் கிழங்கு மியூற்றேசன் முறைமூலம் பெறப்பட்டதாம்.

## சர்வமத சமரச மகாநாடு

வாஷிங்டனிலுள்ள ஜோர்ஜ்டவுன் பல்கலைக் கழகத்தில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய, யூத, கொன்பியூசிய மத பிரமுகர்கள் கலந்து கொண்ட சர்வமத சமரச மகாநாடு நடைபெற்றது. "ஆண்டவனை அடைவதற்கு மனிதன் பல்வேறு மதங்களைக் கடைப்பிடிக்கிறான். சகல மதத்தவர்களும் தமக்குப் புறம்பான மதங்களைத் தழுவும் மக்களைச் சமரசக் கண்ணோட்டத்தோடு ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும்." என இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

வாஷிங்டனில் உள்ள பொட்டோமாக் ஆற்றின் அருகில் உலகிலுள்ள ஆறு பெரிய மதங்களுக்கு மானகோவில்கள் கட்டப்பட்டிருக்கிறது. இம்மதங்களின் நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்று இங்கு தாபிக்கப் பட்டிருக்கிறது. சமய ஆராய்ச்சி மாணவருக்கு இந்நூலகம் பெரும் வாய்ப்பளிக்கும். இவ்வாலயம் 1970 இல் பொதுமக்கள் பாவனைக்கு விடப்படும் எனச் சொல்லப்படுகிறது.

## லண்டன் பரீட்சைகள்

லண்டன் பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்படும் பரீட்சைகள் இவ்வாண்டுக்குப் பின் இலங்கையில் நடைபெறமாட்டாது. இவ்வாண்டு சித்தி பெறாதவர்கள் இந்தியா சென்று பரீட்சை எழுத [illegible]

## எத்தனை முறையும் பாடிடுவேன் !

அனைத்துலகமும் நீயே - என்னை
ஆண்டு கொண்டவனும் நீயே
நினைத்தருளுகின்றனே பரன் - என்
நெஞ்சத்தில் நிறைந்த உன்னை

முன் வினை என்னவென்றறியேன்
என் வினை என்னவென்றுணரேன்
என் பொருளின் திருநிறைதாலும்
உத்தமனே உனக்காய் வாழ்வேன்

அன் பென்று உன்னைக் கண்டேன்
அறிவெத்தனை இன்னவென்று கண்டேன்
நித்தம் நீ பறவென்ற பாடு
நீசன் என் வினை தீர்க்கவல்லோ

எத்தனை பேர் இவ் வலகில் வந்தனரோ
அத்தனையும் உத்தமுக்கிடேர
நித்தம் என் பாவத்தை உணர்ந்த
செட்டுருச் சிலுவையிலே நீ எனக்காகும்

உத்தமம் உன் வாழ்வில் கண்டேன்
எத்தனை என்று எப்படிச் சொல்லுவேன்
கத்தனே கருணை வடிவம் நீயென
எத்தனை முறையும் பாடிடுவேன்.

"ஜோன் ஜீவன்"

---

## கனிதரும் மரங்கள்

பலா, ஈரப்பலா, மா, புளி முதலாம் கனிதரும் மரங்களையும், மற்றும் சில மரங்களையும் விறகுத்தேவைக்கும், தச்சுத்தொழில் தேவைக்கும் தறிப்பதைத் தடுக்குமுகமாக உணவு - விவசாய மந்திரி காரியாலயம் கடும் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. இந்த மரங்கள் நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வது மாத்திரமன்றி வருமானத்தையும் தருகிறபடியால் அவைகளைப் பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## சோயாபீனிலிருந்து மாமிசம்

ஜப்பானிலே உணவு உற்பத்தி செய்யும் ஒருவர் சோயா பீனிலிருந்து செயற்கை மாமிசம் உற்பத்தி செய்யும் நவீன முறை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கின்றார். சோயாபீனிலிருந்து வடித்தெடுத்த எண்ணெய் கொண்டு செய்யப்படும் இந்தச் செயற்கை மாமிசம் விலையில் குறைந்ததும், அதிகம் போஷணை சத்துடையதுமென்று அவர் கூறுகின்றார்.

## மாவட்ட சபைகள்

மாவட்டசபை நகல் மசோதா அனுங்கட்சிகளின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இம்மாசம் 25 ம் திகதி நாடாளுமன்றத்துக்கு முன் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற இருக்கிறது. இம் மசோதா உள்நாட்டமைச்சரால் தயாரிக்கப்பட்டது. அரசாங்கக் கட்சிகளின் தலைவர்களின் ஆராய்ச்சியின்போது திருவாளர்கள் சி. பி. டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா, எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், டாக்டர் தகநாயக்க ஆகியோர் பங்குபற்றினர்.

## மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழா

இவ்வருடம் ஒக்ரோபர் 2 ஆம் திகதி தொடக்கம் யூனெஸ்கோவின் ஆதரவில் மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழா உலகெங்கும் கொண்டாடப்பட இருக்கிறது. காந்தி பற்றிய கண்காட்சியொன்று புதுடில்லியிலும், கருத்தரங்கொன்று பரிசிலும் நடைபெறும். காந்தியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை

ஆகஸ்டில் நடைபெறும் மேற்படி பரீட்சை நடந்த ஆண்டுடன் நிறுத்தப்பட்டது. இனிமேல் வருடத்தில் ஒருமுறை டிசம்பரில் மாத்திரம் நடைபெறும்.

## பாற் பண்ணைகள் நிறுவப்படலாம்

நாட்டின் பல பாகங்களிலும் பால் பண்ணைகளை நிறுவுதற்கு ஊக்கமளிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. புட்டிப் பாலுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் வெளிநாட்டுதவியுடன் ஓர் ஆடைப்பால் தொழிற்சாலை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அச்சமையத்தில் தேவைப்படும் பாலைப் பெறுவதற்கு அரசாங்கம் பால் பண்ணைகள் நிறுவுவதை ஊக்குவிக்கவுள்ளது.

புதிய பால்பண்ணைகளை ஆரம்பிக்க விரும்புவோர்களுக்கு மக்கள் வங்கி கடனுதவி வழங்கும். பால் பண்ணைப் பசுக்களுக்குக் காப்புறுதிப் பாதுகாப்பு அளிக்கும் திட்டமொன்றையும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆராய்ந்துவருகிறது.

## விடுதலை எனும் . . .

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஆசியரையும் கேளுங்கள் அவர் என்ன சொல்வார்? வியட்நாமில் கம்யூனிஸ்டுகள் நடத்தும் போராட்டத்துக்கும் கம்யூனிஸ்டுகளே கூறி வந்த பழங்காலத்துக் காலனி பிடிக்கும் போருக்கும் வேற்றுமை இல்லை என்பர்.

அந்தப் புதப்பாணி "விடுதலைப் போரும்" அதனுடன் பிற நடவடிக்கைகளும் வியட்நாம் குடியரசுக்கு எதிராக மட்டும் நடத்தப்படுவதல்ல. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் ஒரு டஜன் நாடுகளுக்கு எதிராக நடத்தப் பெறுவதாகும். இந்த நாடுகளிலே பெரும்பாலானவை, தாய்லாந்தைப் போலவே தமக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர்ந்துதான் இருக்கின்றன; எதிர்க்கவும் துணிந்து நிற்கின்றன.

### ஏற்றுமதிச் சரக்கு

ஏனெனில் ஏற்றுமதிச் சரக்கான 'விடுதலை' எப்பொழுதும் வன்செயல் மூலம் திணிக்கப்படுவதேயன்றிச் சுயமாக ஏற்றுக் கொள்ளப்படுவதல்ல. எனவே அதற்கு வன்மையான எதிர்ப்பும் எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது. இதற்கு உதாரணம் தென் வியட்நாம்; சிறு அளவில் பிற தென் கிழக்காசிய நாடுகள்.

ஆக்கிரமிப்பாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அவர்கள் செய்த குற்றங்களுக்குப் பழி வாங்காமல் அவர்களைக் காப்பாற்றவும் வேண்டும்; இப்படி எல்லாம் பேசுவதற்குச் சில வட்டாரங்களில் பலத்த ஆதரவு இருப்பது கண்டு உலகின் எங்கள் ஆசியப் பகுதியில் இருக்கும் மக்கள் வியப்பிலாழ்ந்துள்ளனர். "விடுதலை"யை ஏற்றுமதி செய்பவர்களின் உயிருஞ் சொத்தும் குண்டுவீச்சினால் சேதமடையலாகாது— இந்த வகையிலிருக்கிறது அவர்களுடைய ஆட்சேபனைகள். தனக்குத் தானே பட்டம் சூட்டிக்கொண்டிருப்பது "தேசிய விடுதலை முன்னணி." தென் வியட்நாமில் அது செய்து வரும் மிக கோரமான அட்டூழியங்கள் "குண்டு வீச்சை நிறுத்து" என்று கொக்கரிக்கும் வட்டாரங்களில் ஏனோ கொஞ்சம் கூடக் கண்டனக்குரலை எழுப்பவில்லை.

வடவியட்நாம், வியட்காங் ஆக்கிரமிப்பாளர்களின் உயிர்கள் அவர்களுக்கு இரையாகும் தென் வியட்நாமியரின் உயிர்களை விட அதிக மதிப்புள்ளவை என்று நாம் உய்த்துணர வேண்டுமோ என்னவோ?

அமைதியின் காவலர்களாகத் தங்களையே நியமித்துக்கொண்டுள்ள இந்தப் பேர்வழிகள் வட வியட்நாம்மீது குண்டுவீச்சு நிறுத்தப்பட வேண்டும் என்று ஓயாமல் கூச்சலிட்டு வருகின்றனர்.

குண்டுவீச்சை நிறுத்தினால் ஹனோய் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது? இதற்கு அதனிடமிருந்து உருப்படியான பதில் எதையும் கட்டாயமாகப் பெற வேண்டும் என்று ஏனோ இவர்களுக்குத் தோன்றவில்லை. இவர்களுடைய எண்ணம் நல்லதாக இருக்கலாம், ஆனால் இவர்களுடைய போக்கு அவர்களை ஹனோய்க்காகப் பரிந்து பேசுபவர்களாகவும், ஹனோய் நியமிக்காத ஏஜெண்டுகளாகவும் செய்துவிடுகிறது. பயனுள்ள பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஹனோய் தன்னுடைய சொந்த நிபந்தனைகளின்படி இல்லாத வேறு எந்த யோசனையையும் தொடர்ந்து அலட்சியம் செய்து வந்திருக்கிறது.

சுதந்திரக் காவலர்கள் பிளவுபட்டும், ஒற்றுமை யின்றியும் இருக்குமவரை வியட்நாம் போருக்குத் தீர்வு காணவே முடியாது என்பது எங்கள் துணிபு. ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள வடவியட்நாம் ஆட்சி ஒரு தடவை வெற்றிகுசி கண்டுள்ளது. பிளவுபட்டுக் கிடந்த நாட்டிலிருந்து பறித்துக் கொண்ட வெற்றி இது. வடவியட்நாமியர்கள், தம் வழியில் குறுக்கே இருக்கும் நாடுகளுக்கிடையே சிண்டு முடியும் வேலையைச் செய்து வருகின்றனர். ஐயம், பிளவு, கலக விதைகளை அவர்கள் விதைத்து வருகின்றனர். இப்பணியை அவர்களால் செய்யமுடியும் காலம்வரை முன் கூறிய வெற்றி அவர்களுக்குக் கிடைக்காது என்று அவர்களை நம்ப வைப்பது கடினம். எனவே சுதந்திர நாடுகள் உறுதியுடன் இருந்து ஒன்றுபட வேண்டியது மிக அவசியமாகும்.

### உறுதி

அத்தகைய ஒற்றுமையையும், அசையாத உறுதியையும் நாம்

## மலேரியாத் தடை

வடமத்திய, வடமேற்கு மாகாணங்களிற் பரவிவரும் மலேரியா நோயைத் தடுப்பதற்கெனச் சுகாதார அமைச்சு அரசாங்கத்திடம் 2000000 ரூபா கோரியுள்ளது. நாடெங்கும் 25 மலேரியாத் தடுப்பு நிலையங்கள் நிறுவப்படவிருக்கின்றன.

---

தோற்றுவித்தாலன்றித் தற்காலிக அமைதி கொணரும் மேற்போக்கான தீர்வு நமக்குக் கிடைத்தாலும், அதனால் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஏற்படும் ஆபத்துக் கொஞ்சமாக இருக்காது.

பல வழிகளிலே ஏதாவது ஒன்றின் மூலம் இப்போருக்கு முடிவு கட்டலாம். தங்களுடைய சாகசச் செயல்கள் பலனற்றவை என்பதை ஆக்கிரமிப்பாளர்கள் உணர்ந்து தம் அண்டை நாடுகளில் ஊடுருவுவதையும் தலையிடுவதையும் நிறுத்தி விடலாம், ஆனால் இந்த வழியை அவர்கள் எப்போது பின்பற்றுவர்? ஆக்கிரமிப்பு நடத்தத் தாம் கொடுக்கும் பலி தாங்க முடியாததாக இருக்கிறது. அதனால் தம் வாழ்க்கையே படுமோசமாகிப் போய்க்கொண்டிருக்கிறது என்ற உணர்வு வரும்போது தமது இலட்சியத்தை வன்செயலாலும், சதிவேலைகளாலும் அடைய முடியாது என்று உணரும்போதுதான்.

வியட்நாமில் அமைதி மீண்டும் ஏற்படுவதில் உண்மையான ஆர்வமுடையவர்கள் ஒன்றுசேர வேண்டும்; சேர்ந்து ஹனோய்க்குப் புத்தி சொல்ல வேண்டும். அதனுடைய ஆக்கிரமிப்பு வீண் என்பதை அதற்கு எடுத்துச் சொல்லி, அமைதி வழியே சிறந்த வழி என்பதை ஹனோய் உணரும்படி புத்திபுகட்டவேண்டும்.

இரண்டாவது சாத்தியக்கூறு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணுவது : இத்தகைய தீர்வு ஒன்று ஏதாவது ஒரு பேச்சு வார்த்தையை முன் கூட்டியே உருவாக்கி வைக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அனைவருக்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட மனப்பூர்வமான விருப்பம் இருக்க வேண்டும். நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளே இதைச் செய்யலாமா? ஆனால் இதுவரை ஹனோய் இத்தகைய நேரடியான விவாதங்களைத் தடுத்து வந்திருக்கிறது.

எனவே இதற்கு இன்னொரு மாற்று ஒரு பெரிய மாநாட்டை நடத்துவதுதான். அக்கறையுள்ள அரசாங்கங்கள் இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தோ சீனா பற்றிய ஜினிவா மாநாட்டை மீண்டும் கூட்டப் பெறுவது இந்த மாற்று வழியாகவும் அமையலாம். மாநாட்டின் கூட்டுத் தலைவர்; குறிப்பிட்ட கொள்கைகளைப் பிணைப்புகளுக்கு முழுக்குப் போட வேண்டும். இது இந்த மாநாட்டிற்கு மிக அவசியமான ஒன்று ஆக்கிரமிப்பாளர்களுக்கு மேலும் மேலும் ஆயுதங்கள் வழங்கி எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பதைக் கூட்டுத் தலைவர் நிறுத்திவிட்டு, அமைதிக் காக்கக்கூட்டுத் தலைவர் என்ற நிலையிலே பணியாற்ற வேண்டும். அதேசமயத்தில் ஒரு தலைவர் என்ற நிலையிலே ஹனோயிடம் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தித் தமது கடமையையும் செயலையாகச் செய்யலாம் — மாநாட்டு மேசைக்கு ஹனோயை வரும்படிச் செய்வதுதான் அது.

### தீர்வு

சேர்முகமான அல்லது மறைமுகமான பேச்சு வார்த்தைகள் தொடங்கப் பெறுமோ அல்லது உலக மாநாடு கூட்டப் பெறுமோ அவை அனைத்திலும் இறுதியான தீர்வு, போருக்கு சமாதானமான தீர்க்கமான முடிவை உறுதி செய்வதாக இருத்தல் வேண்டும். தென் வியட்நாமுக்குச் சுதந்திரம் உறுதி செய்யப்பட்டுவிட்டால் உலகிலே பிற சிறு நாடுகளும் வெளியார் தலையீடில்லாத வெளியிலிருந்து நடத்தப் பெறும் ஆக்கிரமிப்பும் வன்செயலும் இல்லாத, ஒரு சுதந்திர நிலையை, அதிக பத்திரமான சுதந்திர நிலையை அடைய எதிர்பார்க்க முடியும்.

ஒருதலைப்பட்சமான குண்டு வீச்சு நிறுத்தம், ஆக்கிரமிப்பாளரை அழிவு வேலைகளில் இன்னும் அதிகமாக ஈடுபடத் தான் உதவும்; இதைச் சிறு நாடுகள் உணர வேண்டும்; பெரும்பாலான நாடுகள் உணர்ந்தும் உள்ளன. அத்துடன் தென் வியட்நாம் போருக்குக் காணப்பெறும் எந்தத் தீர்வும் எதிர்காலத்தில் "வியட்நாம்கள்" தோன்றாமல் இருக்க உறுதி செய்ய வேண்டும்.

— அமெரிக்கன் தம்போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ தய தா ர கை
UTHAYATHARAKAI

1968 ஆம் ஆண்டு ஜனவரி மீ 19 ஆம் நாள்

# சுதேசிப் பொருள்கள்

இல்லை, இல்லை என்பதே பேச்சாகி, கிடைப்பதற்கரிய பொருளுக்காக நீண்டவரிசையிற் காத்து நிற்று பழக்கமாகி வருவதைக் காண்கிறோம். அயல்நாட்டுப் பொருள்களில் மோகமும், இல்லாத பொருளையே விரும்புவதும் காரணமாகலாம். 'நெஸ்பிறே' கிடைக்கவில்லை, காஞ்சிபுரம் கிடைக்கவில்லை என்பாருமுண்டு. மல்லியில்லை, மருந்தில்லை என்பாருமுண்டு. தேவையானவை இல்லையென்பாரோடு நாமும் சேரலாம். தேவையற்றவை — சாதாரண வாழ்வுக்குத் தேவையற்றவை — இல்லையென்பாரை விட்டுவிடுவோம். நிலைமைக்குத் தக்கதாய் வாழ வகை செய்வது யாவருக்கும் வேண்டியது.

இந்தியா சுதந்திர போராட்டம் நடத்தியபோது அன்னிய பொருள்களிலுள்ள நாட்டத்தைக் குறைத்துக் கொண்டது யாவருக்குந் தெரியும். சுதேசிப் பொருள்களில் பற்று வைத்துக் கரடுமுரடான கதராடை கட்டப் பழகியது சுதந்திரம் பெற எவ்வளவோ கஷ்டமனுபவித்தது. நாம் அவ்வளவு கஷ்டப் பட்டுச் சுதந்திரம் பெற்றோம் என்பதற்கில்லை. பெற்றுள்ள சுதந்திரத்தைப் பேணிக் காக்கப் பாடுபட வேண்டியவர்கள். நமக்குள்ள நிலைபரத்துக்குத் தக்கதாக வாழ்க்கையை யமைக்கப் பழக வேண்டியவர்கள்.

கடந்த யுத்தகாலம் நமக்குத் தேவையான உடை உணவில் மாற்றந் தந்தது. உள்ளதை — கிடைப்பதை — பயன் படுத்தப் பழகினோம். தேவை அப்படிச் செய்வித்தது. மாற்றுணவில் காலங் கழித்தோம். இன்று நமது பொருளாதாரம் நம் வாழ்க்கை முறையை மாற்ற நிர்ப்பந்திக்கிறது.

